ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்குறுங்குடி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்குறுங்குடி

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – உய்யவுலகு

‡ உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி ⋆
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும் ⋆
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக் ⋆
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி ⋆
மன்னு குறுங்குடியாய் ! வெள்ளறையாய் ! ⋆
மதிள் சூழ் சோலை மலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே ! ⋆
என் அவலம் களைவாய் ! ஆடுக செங்கீரை ⋆
ஏழ் உலகும் உடையாய் ! ஆடுக ஆடுகவே ‖ **1.6.8** ‖

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

‡ கரண்டம் ஆடு பொய்கையுள் ⋆
கரும் பனைப் பெரும் பழம் ⋆
புரண்டு வீழ வாளை பாய் ⋆
குறுங்குடி நெடுந்தகாய் ⋆
திரண்ட தோள் இரணியன் ⋆
சினங்கொள் ஆகம் ஒன்றையும் ⋆

இரண்டு கூறு செய்துகந்த ⋆
சிங்கம் என்பதுன்னையே ॥ **62** ॥

## பெரிய திருமொழி – வாணிலா முறுவல்

ஏவினார் கலியார் நலிக என்று ⋆
என் மேல் எங்ஙனே வாழும் ஆறு ⋆
ஐவர் கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன் ⋆
குறுங்குடி நெடும் கடல் வண்ணா ! ⋆
பாவினார் இன் சொல் பன்மலர் கொண்டு ⋆
உன் பாதமே பரவிநான் பணிந்து ⋆
என் நாவினால் வந்துன் திருவடி அடைந்தேன் ⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் ॥ **1.6.8** ॥

## பெரிய திருமொழி – கைம்மானம்

‡ பேரானைக் ⋆
குறுங்குடி எம் பெருமானை ⋆
திருத்தண்கால் ஊரானைக் ⋆
கரம்பனூர் உத்தமனை ⋆
முத்திலங்கு கார் ஆர் திண் கடல் ஏழும் ⋆
மலை ஏழ் இவ் உலகேழ் உண்டும் ⋆
ஆராதென்றிருந்தானைக் ⋆
கண்டது தென் அரங்கத்தே ॥ **5.6.2** ॥

## பெரிய திருமொழி – துறப்பேன்

மானேய் நோக்கு நல்லார் ⋆
மதி போல் முகத்துலவும் ⋆
ஊனேய் கண் வாளிக்கு ⋆

உடைந்தோட்டந்துன் அடைந்தேன் ⋆
கோனே ! குறுங்குடியுள் குழகா ! ⋆
திருநறையூர்த் தேனே ⋆
வரு புனல் சூழ் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.3** ‖

## பெரிய திருமொழி – தவள இளம்பிறை

‡ தவள இளம் பிறை துள்ளும் முந்நீர் ⋆
தண் மலர்த் தென்றலோடன்றில் ஒன்றித் துவள ⋆
என் நெஞ்சகம் சோர ஈரும் ⋆
சூழ் பனி நாள் துயிலாதிருப்பேன் ⋆
இவளும் ஓர் பெண் கொடி என்றிரங்கார் ⋆
என் நலம் ஐந்தும் முன் கொண்டு போன ⋆
குவளை மலர் நிற வண்ணர் மன்னு ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.1** ‖

தாதவிழ் மல்லிகை புல்லி வந்த ⋆
தண் மதியின் இள வாடை இன்னே ⋆
ஊதை திரி தந்துழறி உண்ண ⋆
ஓர் இரவும் உறங்கேன் ⋆
உறங்கும் பேதையர் பேதைமையால் இருந்து ⋆
பேசிலும் பேசுக பெய்வளையார் ⋆
கோதை நறு மலர் மங்கை மார்வன் ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.2** ‖

காலையும் மாலை ஒத்துண்டு ⋆
கங்குல் நாழிகை ஊழியில் நீண்டுலாவும் ⋆
போல்வதோர் தன்மை புகுந்து நிற்கும் ⋆

பொங்கழலே ஒக்கும் வாடை சொல்லில் ⋆
மாலவன் மா மணி வண்ணன் மாயம் ⋆
மற்றும் உள அவை வந்திடா முன் ⋆
கோல மயில் பயிலும் புறவின் ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.3** ‖

கரு மணி பூண்டு வெண் நாகணைந்து ⋆
கார் இமில் ஏற்றணர் தாழ்ந்துலாவும் ⋆
ஒரு மணி ஓசை என் உள்ளம் தள்ள ⋆
ஓர் இரவும் உறங்காதிருப்பேன் ⋆
பெரு மணி வானவர் உச்சி வைத்த ⋆
பேர் அருளாளன் பெருமை பேசி ⋆
குரு மணி நீர் கொழிக்கும் புறவின் ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.4** ‖

திண் திமில் ஏற்றின் மணியும் ⋆
ஆயன் தீங்குழல் ஓசையும் தென்றலோடு ⋆
கொண்டதோர் மாலையும் அந்தி ஈன்ற ⋆
கோல இளம் பிறையோடு கூடி ⋆
பண்டைய அல்ல இவை நமக்குப் ⋆
பாவியேன் ஆவியை வாட்டம் செய்யும் ⋆
கொண்டல் மணி நிற வண்ணர் மன்னு ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.5** ‖

எல்லியும் நன் பகலும் இருந்தே ⋆
ஏசிலும் ஏசுக ஏந்திழையார் ⋆
நல்லர் அவர் திறம் நாம் அறியோம் ⋆
நாண் மடம் அச்சம் நமக்கிங்கில்லை ⋆

வல்லன சொல்லி மகிழ்வரேலும் ⋆
மா மணி வண்ணரை நாம் மறவோம் ⋆
கொல்லை வளர் இள முல்லை புல்கு ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.6** ‖

செங்கண் நெடிய கரிய மேனித் ⋆
தேவர் ஒருவர் இங்கே புகுந்து ⋆
என் அங்கம் மெலிய வளை கழல ⋆
ஆது கொலோ என்று சொன்ன பின்னை ⋆
ஐங்கணை வில்லி தன் ஆண்மை ⋆
என்னோடாடும் அதனை அறிய மாட்டேன் ⋆
கொங்கலர் தண் பணை சூழ் புறவின் ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.7** ‖

கேவலம் அன்று கடலின் ஓசை ⋆
கேண்மின்கள் ஆயன் கை ஆம்பல் வந்து ⋆
என் ஆவி அளவும் அணைந்து நிற்கும் ⋆
அன்றியும் ஐந்து கணை தெரிந்திட்டு ⋆
ஏவலம் காட்டி இவன் ஒருவன் ⋆
இப்படியே புகுந்தெய்திடா முன் ⋆
கோவலர் கூத்தன் குறிப்பறிந்து ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.8** ‖

சோத்தென நின்று தொழ இரங்கான் ⋆
தொன்னலம் கொண்டெனக்கின்று காறும் ⋆
போர்ப்பதோர் பொற்படம் தந்து போனான் ⋆
போயின ஊர் அறியேன் ⋆
என் கொங்கை மூத்திடுகின்றன ⋆

மற்றவன் தன் மொய் அகலம் அணையாது வாளா ⋆
கூத்தன் இமையவர் கோன் விரும்பும் ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.9** ‖

‡ செற்றவன் தென் இலங்கை மலங்கத் ⋆
தேவ பிரான் திரு மா மகளைப் பெற்றும் ⋆
என் நெஞ்சகம் கோயில் கொண்ட ⋆
பேர் அருளாளன் பெருமை பேசக் கற்றவன் ⋆
காமரு சீர்க் கலியன் ⋆
கண் அகத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன் ⋆
முற்றுலகாளி நின்ற ⋆
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **9.5.10** ‖

## பெரிய திருமொழி – அக்கும் புலியின்

‡ அக்கும் புலியின் ⋆
அதளும் உடையார் ⋆
அவர் ஒருவர் பக்கம் நிற்க நின்ற ⋆
பண்பர் ஊர் போலும் ⋆
தக்க மரத்தின் ⋆
தாழ் சினை ஏறி ⋆
தாய் வாயில் கொக்கின் பிள்ளை ⋆
வெள் இறவுண்ணும் குறுங்குடியே ‖ **9.6.1** ‖

துங்கார் அரவத் திரை வந்துலவத் ⋆
தொடு கடலுள் ⋆
பொங்கார் அரவில் துயிலும் ⋆
புனிதர் ஊர் போலும் ⋆
செங்கால் அன்னம் ⋆

திகழ் தண் பணையில் பெடையோடும் ⋆
கொங்கார் கமலத்து ⋆
அலரில் சேரும் குறுங்குடியே ॥ **9.6.2** ॥

வாழக் கண்டோம் ⋆
வந்து காண்மின் தொண்டீர்காள் ⋆
கேழல் செங்கண் ⋆
மாமுகில் வண்ணர் மருவும் ஊர் ⋆
ஏழைச் செங்கால் ⋆
இன் துணை நாரைக்கிரை தேடி ⋆
கூழைப் பார்வைக் ⋆
கார் வயல் மேயும் குறுங்குடியே ॥ **9.6.3** ॥

சிர முன் ஐந்தும் ஐந்தும் ⋆
சிந்தச் சென்று ⋆
அரக்கன் உரமும் கரமும் துணித்த ⋆
உரவோன் ஊர் போலும் ⋆
இரவும் பகலும் ⋆
ஈன் தேன் முரல ⋆
மன்றெல்லாம் குரவின் பூவே தான் ⋆
மணம் நாறும் குறுங்குடியே ॥ **9.6.4** ॥

கவ்வைக் களிற்று மன்னர் மாளக் ⋆
கலி மான் தேர் ஐவர்க்காய் ⋆
அன்றமரில் ⋆
உய்த்தான் ஊர் போலும் ⋆
மை வைத்திலங்கு ⋆
கண்ணார் தங்கள் மொழி ஒப்பான் ⋆

கொவ்வைக் கனிவாய்க் ⋆
கிள்ளை பேசும் குறுங்குடியே ॥ **9.6.5** ॥

தீநீர் வண்ண ⋆
மா மலர் கொண்டு விரை ஏந்தி ⋆
தூநீர் பரவித் ⋆
தொழுமின் எழுமின் தொண்டீர்காள் ⋆
மாநீர் வண்ணர் ⋆
மருவி உறையும் இடம் ⋆
வானில் கூனீர் மதியை ⋆
மாடம் தீண்டும் குறுங்குடியே ॥ **9.6.6** ॥

வல்லிச் சிறு நுண் இடையார் இடை ⋆
நீர் வைக்கின்ற ⋆
அல்லல் சிந்தை தவிர ⋆
அடைமின் அடியீர்காள் ⋆
சொல்லில் திருவே அனையார் ⋆
கனி வாய் எயிறொப்பான் ⋆
கொல்லை முல்லை ⋆
மெல் அரும்பீனும் குறுங்குடியே ॥ **9.6.7** ॥

நாரார் இண்டை ⋆
நாண் மலர் கொண்டு நம் தமர்காள் ⋆
ஆரா அன்போடு ⋆
எம்பெருமான் ஊர் அடைமின்கள் ⋆
தாரா வாரும் ⋆
வார் புனல் மேய்ந்து வயல் வாழும் ⋆

கூர் வாய் நாரை ⋆
பேடையொடாடும் குறுங்குடியே ‖ **9.6.8** ‖

நின்ற வினையும் துயரும் கெட ⋆
மா மலர் ஏந்தி ⋆
சென்று பணிமின் எழுமின் ⋆
தொழுமின் தொண்டீர்காள் ⋆
என்றும் இரவும் பகலும் ⋆
வரி வண்டிசை பாட ⋆
குன்றின் முல்லை ⋆
மன்றிடை நாறும் குறுங்குடியே ‖ **9.6.9** ‖

‡ சிலையால் இலங்கை செற்றான் ⋆
மற்றோர் சின வேழம் ⋆
கொலை ஆர் கொம்பு கொண்டான் மேய ⋆
குறுங்குடி மேல் ⋆
கலை ஆர் பனுவல் வல்லான் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
நிலை ஆர் பாடல் பாடப் ⋆
பாவம் நில்லாவே ‖ **9.6.10** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ முளைக் கதிரைக் குறுங்குடியுள் முகிலை ⋆
மூவா மூ உலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற ⋆
அளப்பரிய ஆர் அமுதை அரங்கம் மேய அந்தணனை ⋆
அந்தணர் தம் சிந்தை யானை ⋆
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில் ⋆
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு ⋆

வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக ! என்று ⋆
மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே ‖ **14** ‖

## திருவாய்மொழி – பொருமாநீள் படை

‡ நம்பியைத் ⋆
தென் குறுங்குடி நின்ற ⋆
அச்செம்பொனே திகழும் ⋆
திரு மூர்த்தியை ⋆
உம்பர் வானவர் ⋆
ஆதியஞ்சோதியை ⋆
எம் பிரானை ⋆
என் சொல்லி மறப்பனோ ‖ **1.10.9** ‖

## திருவாய்மொழி – சொன்னால்

உளன் ஆகவே எண்ணித் ⋆
தன்னை ஒன்றாக தன் செல்வத்தை ⋆
வளனா மதிக்கும் ⋆
இம் மானிடத்தைக் கவி பாடியென் ⋆
குளனார் கழனி சூழ் ⋆
கண்ணன் குறுங்குடி மெய்ம்மையே ⋆
உளனாய எந்தையை ⋆
எந்தை பெம்மானை ஒழியவே ‖ **3.9.2** ‖

## திருவாய்மொழி – எங்ஙனேயோ

‡ எங்ஙனேயோ அன்னைமீர்காள் ! ⋆
என்னை முனிவது நீர் ⋆
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை ⋆

நான் கண்ட பின் ⋆
சங்கினோடும் நேமியோடும் ⋆
தாமரைக் கண்களோடும் ⋆
செங்கனி வாய் ஒன்றினோடும் ⋆
செல்கின்றதென் நெஞ்சமே ‖ **5.5.1** ‖

என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் ⋆
என்னை முனியாதே ⋆
தென் நன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
மின்னும் நூலும் குண்டலமும் ⋆
மார்வில் திருமறுவும் ⋆
மன்னு பூணும் நான்கு தோளும் ⋆
வந்தெங்கும் நின்றிடுமே ‖ **5.5.2** ‖

நின்றிடும் திசைக்கும் நையும் என்று ⋆
அன்னையரும் முனிதிர் ⋆
குன்ற மாடத் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
வென்றி வில்லும் தண்டும் வாளும் ⋆
சக்கரமும் சங்கமும் ⋆
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா ⋆
நெஞ்சுள்ளும் நீங்காவே ‖ **5.5.3** ‖

நீங்க நில்லாக் கண்ண நீர்கள் என்று ⋆
அன்னையரும் முனிதிர் ⋆
தேன் கொள் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆

பூந் தண் மாலைத் தண் துழாயும் ⋆
பொன் முடியும் வடிவும் ⋆
பாங்கு தோன்றும் பட்டும் நாணும் ⋆
பாவியேன் பக்கத்தவே ॥ **5.5.4** ॥

பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று ⋆
அன்னையரும் முனிதிர் ⋆
தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
தொக்க சோதித் தொண்டை வாயும் ⋆
நீண்ட புருவங்களும் ⋆
தக்க தாமரைக் கண்ணும் ⋆
பாவியேன் ஆவியின் மேலனவே ॥ **5.5.5** ॥

மேலும் வன் பழி நங்குடிக்கிவள் என்று ⋆
அன்னை காண கொடாள் ⋆
சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
கோல நீள் கொடி மூக்கும் ⋆
தாமரைக் கண்ணும் கனி வாயும் ⋆
நீல மேனியும் நான்கு தோளும் ⋆
என் நெஞ்சம் நிறைந்தனவே ॥ **5.5.6** ॥

நிறைந்த வன் பழி நம் குடிக்கிவள் என்று ⋆
அன்னை காண கொடாள் ⋆
சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த ⋆

நீண்ட பொன் மேனியொடும் ⋆
நிறைந்தென் உள்ளே நின்றொழிந்தான் ⋆
நேமி அங்கை உளதே ‖ **5.5.7** ‖

கையுள் நன் முகம் வைக்கும் நையும் என்று ⋆
அன்னையரும் முனிதிர் ⋆
மை கொள் மாடத் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும் ⋆
சிற்றிடையும் வடிவும் ⋆
மொய்ய நீள் குழல் தாழ்ந்த தோள்களும் ⋆
பாவியேன் முன்நிற்குமே ‖ **5.5.8** ‖

முன் நின்றாய் என்று தோழி மார்களும் ⋆
அன்னையரும் முனிதிர் ⋆
மன்னு மாடத் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
சென்னி நீள் முடி ஆதியாய ⋆
உலப்பில் அணி கலத்தன் ⋆
கன்னல் பால் அமுதாகி வந்து ⋆
என் நெஞ்சம் கழியானே ‖ **5.5.9** ‖

கழிய மிக்கதோர் காதலள் இவள் என்று ⋆
அன்னை காண கொடாள் ⋆
வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை ⋆
நான் கண்ட பின் ⋆
குழுமித் தேவர் குழாங்கள் ⋆
கை தொழச் சோதி வெள்ளத்தின் உள்ளே ⋆

எழுவதோர் உரு என் நெஞ்சுள் எழும் ⋆
ஆர்க்கும் அறிவரிதே ॥ **5.5.10** ॥

‡ அறிவரிய பிரானை ⋆
ஆழி அங்கையனையே அலற்றி ⋆
நறிய நல் மலர் நாடி ⋆
நன் குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
குறி கொள் ஆயிரத்துள் இவை பத்தும் ⋆
திருக்குறுங்குடி அதன் மேல் ⋆
அறியக் கற்று வல்லார் வைட்ணவர் ⋆
ஆழ் கடல் ஞாலத்துள்ளே ॥ **5.5.11** ॥

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

தாமரை மேல்
மின் இடையாள் நாயகனை விண்ணகருள் பொன் மலையை ⋆
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை ⋆
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை ⋆
மன்னிய தண் சேறை வள்ளலை ॥ **62** ॥

திரு குறுங்குடிவல்லி சமேத நின்றநம்பி திருவடிகளே சரணம்